

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 215 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 03 – சனிக்கிழமை 16 மார்ச் 2024 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 215 : Thiruvalluvar Year - 2055 - Panguni 03 - Saturday 16 March 2024 - Trichy ★★ 12 Pages ₹ 5.00


## பிரிவினை எண்ணம் எங்களுக்கு இல்லை! நாட்டின் பாதுகாப்பே முக்கியம் என அறிவித்தவர் பேரறிஞர் அண்ணா!

# தேச பக்தி பற்றி எங்களுக்கு யாரும் போதிக்கவேண்டிய அவசியம் இல்லை!

## வடசென்னை வளர்ச்சித்திட்ட விரிவாக்க விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலடி!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.3.2024) சென்னை, தங்க சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வடசென்னை பகுதிக்கு விரிவான வளர்ச்சியை உறுதி செய்திடும் வகையில் வடசென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகளின் கீழ் பதினோரு துறைகளை உள்ளடக்கி 4181.03 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 219 திட்டப் பணிகளை தொடங்கி வைத்து, வடசென்னை வளர்ச்சித் திட்டத்திற்கான இலச்சினையை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, தங்கம் தென்னரசு, மா. சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சி.வி.கணேசன், மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், மரு. கலாநிதி வீராசாமி, இரா, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி. சேகர், தாயகம் கவி, இ.பரந்தாமன், ஜான் எபிநேசர், அ.வெற்றியழகன், ஐட்ரீம் மூர்த்தி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் த.கார்த்திகேயன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, அரசு துறைச் செயலாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, மார்ச் 16–**

**‘பிரிவினை எண்ணம் எங்களுக்கு இல்லை! நாட்டின் பாதுகாப்பே முக்கியம் என அறிவித்தவர் பேரறிஞர் அண்ணா!’ என்றும் ‘தேச பக்தி பற்றி எங்களுக்கு போதிக்கவேண்டிய அவசியம் யாருக்கும் இல்லை!’ எனவும் வடசென்னை வளர்ச்சித்திட்ட விரிவாக்க விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**இவ்விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–**

நம்முடைய அரசு, இப்படி சென்னையை உயர்த்த நாள்தோறும் புதிய புதிய திட்டங்களாக நிறைவேற்றுகிறது. ஆனால், கடந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் சென்னை எப்படி வெள்ளத்தில் முழ்கியது? சென்னை மட்டுமா! ஒட்டு மொத்த தமிழ்நாட்டின் நிதிநிலைமையும் மூழ்கடித்து விட்டு சென்றார்கள். அவர்களைப் போன்று தான் 10 ஆண்டு கால பா.ஜ.க ஆட்சியும் சென்னைக்கு எதுவும் செய்யவில்லை. தமிழ்நாட்டிற்கும் ஒன்றும் செய்யவில்லை.

ஆனால், நாளைக்கு பிரதமர் மோடி கன்னியாகுமரி வரப்போகிறார். எதற்காக வரப் போகிறார்? தமிழ்நாட்டிற்கான சிறப்புத் திட்டங்களை உருவாக்கித் தர வரப் போகிறாறா? இல்லை, ஓட்டு கேட்டு வரப் போகிறார். ஓட்டு கேட்டு வருவதை நான் தவறு என்று சொல்ல விரும்பவில்லை.

சென்னை வெள்ளத்தில் மிதந்த போது, மக்களுக்கு ஆறுதல் கூற வராத பிரதமர், தூத்துக்குடியும், கன்னியாகுமரியும் வெள்ளத்தில் மிதந்த போது மக்களைப் பார்க்க வராத பிரதமர், ஓட்டு கேட்டு மட்டும் வருவது நியாயமாக இருக்கிறதா? குஜராத் மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட போது, அன்றைய தினமே ஹெலிகாப்டரில் சென்று பார்த்தாரே! மறுநாளே, நிவாரண நிதி கொடுத்தாரே! குஜராத்திற்கு ஏன் கொடுத்தீர்கள் என்று நான் கேட்கவில்லை. தமிழ்நாட்டுக்கு ஏன் தரவில்லை என்று தான் கேட்கிறேன். குஜராத்துக்கு அன்றைய தினமே நிதி தருவதும், தமிழ்நாட்டிற்கு மூன்று மாதம் சென்ற பிறகும் நிதி தர மனதில்லாமல் போவதும் ஏன்? இதை கேட்டால், நம்மை பிரிவினைவாதி என்று அடையாளம் காட்டுகிறார்கள். நம்மை பிரிவினைவாதி போல் பேசுகிறார்கள்.

### மற்ற மாநிலங்களுக்கு நிதி – தமிழ்நாட்டிற்கு ஒன்றுமில்லை!

அது மட்டுமா! சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்டப் பணி! நாம் ஆட்சிக்கு வந்த உடனே, பிரதமரை நான் முதல் முறையாக பார்க்கச் சென்றபோது, மெட்ரோ பணிக்கு நிதி கேட்டேன். இப்போது, 3 வருடம் ஆகிறது, என்ன நிலைமை? நமக்கு அடுத்து கேட்ட மாநிலங்களுக்கு வழங்குகிறார்கள். ஆனால், நமக்கு ஒன்றும் வரவில்லை! தரவில்லை!

நாம் கேட்டுக் கொண்டே இருப்பது என்ன? ஒன்றிய அரசுக்கு அதிக வரி வருவாய் எங்கிருந்து போகிறது? நம்முடைய தமிழ்நாட்டில் இருந்து போகிறது. நம்முடைய பணம் தான் போகிறது. ஆனால், அதற்கேற்ற மாதிரி திருப்பி தருகிறார்களா? நாம் ஒரு ரூபாய் கொடுத்தால், 28 பைசா தான் மறுபடியும் நமக்கு வருகிறது! அதையாவது ஒழுங்காக கொடுக்கிறார்களா? இல்லை!

நிதி கேட்டு கடிதம் எழுதுகிறோம்! நம்முடைய எம்.பி.க்கள் எல்லாம், நிதி கொடுங்கள் என்று நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்கிறார்கள். அதற்கு பிறகு தான் அந்த 28 பைசாவையும் கொடுக்கிறார்கள். இதை சொன்னால் நாம் பிரிவினை பேசுகிறோமா!

மாண்புமிகு பிரதமர் மோடி அவர்களே! பாரதப் பிரதமர் அவர்களே! பிரிவினை எண்ணம் எங்களுக்கு இல்லை. ஒரு கண்ணில் வெண்ணெய்யும், மற்றொரு கண்ணில் சுண்ணாம்பும் ஏன் என்று தான் கேட்கிறோம். நான் அழுத்தம் திருத்தமாக சொல்வது, தேசபக்தியை பற்றி எங்களுக்கு யாரும் போதிக்க வேண்டியது அவசியம் இல்லை. நாட்டுப் பற்று பற்றி எங்களுக்கு யாரும் வகுப்பு எடுக்க வேண்டிய அவசியமே கிடையாது.

சீன நாட்டில் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டபோது, 1962ஆம் ஆண்டு, திராவிட நாடு கோரிக்கையை கைவிட்டு, இந்திய நாட்டின் பாதுகாப்பே முக்கியம் என்று அறிவித்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்!

> ### பிரதமர் ஓட்டு கேட்க வருவது நியாயமா?
>
> **“சென்னை வெள்ளத்தில் மிதந்த போது, மக்களுக்கு ஆறுதல் கூற வராத பிரதமர், தூத்துக்குடியும், கன்னியாகுமரியும் வெள்ளத்தில் மிதந்த போது மக்களைப் பார்க்க வராத பிரதமர், ஓட்டு கேட்டு மட்டும் வருவது நியாயமாக இருக்கிறதா? குஜராத் மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட போது, அன்றைய தினமே ஹெலிகாப்டரில் சென்று பார்த்தாரே! மறுநாளே, நிவாரண நிதி கொடுத்தாரே! குஜராத்திற்கு ஏன் கொடுத்தீர்கள் என்று நான் கேட்கவில்லை. தமிழ்நாட்டுக்கு ஏன் தரவில்லை என்று தான் கேட்கிறேன்.”**

1971 ஆம் ஆண்டு இந்தியாவைப் பாகிஸ்தான் அச்சுறுத்திய போது, தமிழ்நாடு சட்டமன்றத்தில் பாகிஸ்தான் படையெடுப்பை கண்டித்து, கண்டனத் தீர்மானம் நிறைவேற்றி, 1972ஆம் ஆண்டு பாகிஸ்தான் போரின் போது, அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களும், நாட்டுக்காக, நாட்டின் பாதுகாப்புக்காக ஆறு கோடி ரூபாய் நிதி வழங்கியவர் திமுக முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள்!

அன்றைய தினம், அனைத்து மாநிலங்களும் வழங்கிய தொகை எவ்வளவு தெரியுமா? மொத்தமே 25 கோடி! இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்து மாநிலங்களும் மொத்தமாக வழங்கிய தொகை 25 கோடி! அதில் 6 கோடியை வழங்கியது திராவிட முன்னேற்றக் கழக அரசு! அந்தப் போரில், வீரமரணம் அடைந்த இராணுவ வீரர்களுக்கு நிதியும் நிலமும் வழங்கிய அரசு, கலைஞரின் அரசு! அதுமட்டுமல்ல, 1999ஆம் ஆண்டு கார்கில் போரின் போது, அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம், மூன்று தவணைகளாக மொத்தம் 50 கோடி ரூபாய் வழங்கிய அரசும் முதல்வர் கலைஞரின் அரசு தான்! இந்தியாவைக் காப்பதற்கு எங்களை நாங்கள் ஒப்படைத்துக் கொண்டவர்கள் என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். தமிழ்நாட்டில் கால் பதித்து, இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக குரல் கொடுத்து வருபவர்கள் நாங்கள்!

### இந்தியா வளம்பெற உழைத்துக் கொண்டிருக்கிறோம்!

இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை வளர்த்தெடுத்த நாங்கள், உலகின் தலைசிறந்த கூட்டாட்சி நாடாக, மக்களாட்சி நாடாக இந்தியா வளர்ந்து, வளம் பெற வேண்டும் என்பதற்காகத் தான் உழைத்துக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டிற்கு எந்த நன்மையும் செய்யாத உங்களுக்கு, தமிழ்நாட்டு மக்களின் ஓட்டு மட்டும் வேண்டுமா? இது என்ன நியாயம்?

ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் கேட்கிறார்கள்? பத்து ஆண்டுகளில் என்ன சிறப்புத் திட்டங்கள் தமிழ்நாட்டுக்கு கொண்டு வந்திருக்கிறீர்கள். ”பதில் கூறுங்கள் பிரதமர் அவர்களே கேட்கிறார்கள், மக்கள் கேட்கிறார்கள், நாங்கள் கேட்கவில்லை. மக்கள் கேட்கிறார்கள். தமிழ்நாட்டை சீரழித்த அ.தி.மு.கவையும், தமிழ்நாட்டை கண்டுகொள்ளாத ஒன்றிய பா.ஜ.கவையும் மக்கள் நிராகரிக்க தயாராகிவிட்டார்கள்! அதுதான் இந்தக் காட்சி, இந்தக் சாட்சி. தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபடும் திராவிட மாடல் அரசும், உங்களுக்காக எந்நாளும் உழைக்க இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினும் இருக்கிறேன்!

இன்றைக்கு தொடங்கி வைக்கப்பட்டிருக்கின்ற வடசென்னை வளர்ச்சித் திட்டங்கள் அதன் அடையாளம் தான்! தமிழ்நாட்டின் வளர்ச்சியின் தொடர்ச்சியாக, இந்தியாவையும் காக்க வேண்டிய பெரும் பொறுப்பு தமிழ்நாட்டு மக்களான நமக்கு வந்து சேர்ந்திருக்கிறது. அதற்கு துணை நிற்க, உங்கள் ஸ்டாலின் அழைக்கிறேன். தமிழ்நாட்டை வளர்ப்போம்! இந்தியாவை காப்போம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## தி.மு.கழக ஆட்சியில் திரும்பிய பக்கமெல்லாம் திட்டங்கள் – வளர்ச்சிகள்!

# இந்தியாவே சென்னையை திரும்பிப் பார்க்கிறது!

## சாதனைகளை விளக்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

ஒரு சில அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கின்றபோது தான் கூடுதல் மகிழ்ச்சி ஏற்படும். அதேபோன்ற மகிழ்ச்சியை ஏற்படுத்தும் நிகழ்ச்சி தான் இது!

“வடசென்னை வளர்ச்சி திட்டம்! இந்தத் திட்டத்தின் பெயரே போதும், நம்முடைய திராவிட மாடல் அரசு இந்தப் பகுதியை எவ்வளவு முக்கியமாக நினைக்கிறது என்பதற்கு! இது ஒரு காரணம்.

### எல்லோர்க்கும் எல்லாம் என்பதே வளர்ச்சி!

தி.மு.க. உருவானதும் வட சென்னையில் தான்; முதலமைச்சரான என்னை, சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுத்ததும், இந்த வட சென்னை கொளத்தூர் தொகுதி மக்கள்தான்! எனவேதான், எம்.எல்.ஏ.,வாக, மேயராக, அமைச்சராக, துணை முதலமைச்சராக, இப்போது, முதலமைச்சராக சிறப்பு கவனம் செலுத்தி, வளர்ச்சி என்பது, ‘எல்லார்க்கும் எல்லாம்’ என இருக்க வேண்டும் என்று திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு இருக்கிறேன்.

‘செயல்பாபு’ என்று என்னால் அழைக்கப்படுகின்ற அமைச்சர் சேகர்பாபு, மிகக் குறுகிய காலத்தில் இந்த விழாவை மிகப்பிரமாண்டமாக ஏற்பாடு செய்திருக்கிறார்.

இந்து சமய அறநிலையத் துறையில், எப்படி முத்திரை பதிக்கிறாரோ, அதேபோல, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் திட்டங்களாலும் முத்திரை பதிக்கிறார் என்பதற்கு இந்த விழாவே சான்று!

இங்கு அமர்ந்திருக்கும், நம்முடைய அமைச்சர் நேரு, அமைச்சர் சேகர்பாபு, மேயர், துணை மேயர், அதிகாரிகள் என எல்லோருக்கும் நான் கூறிக் கொள்வது, சென்னை மாநகரை, இந்தியாவின் தலைசிறந்த மாநகரமாக, நவீன நகரமாக உருவாக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் உங்களிடம் ஒப்படைத்திருக்கிறேன்.

அந்தப் பணியை மிகச் சிறப்பாக செய்ய வேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுக்கவில்லை, கட்டளை இடுகிறேன்! இதைச் சொல்வது மட்டுமல்ல, நானே அதைத் தொடர்ந்து கண்காணிப்பேன் என்பதும் உங்களுக்கு தெரியும்!

### மக்களால் தேர்வான முதல் மேயர் நான்!

நம் தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டியவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா! மெட்ராஸுக்கு சென்னை என்று பெயர் சூட்டியவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர்! அப்படிப்பட்ட சென்னை மாநகரில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மேயர் என்ற பெருமை எனக்கு உண்டு! 500 ஆண்டுகள் பழமைவாய்ந்த சென்னை மாநகரத்தை நவீனமாக்கியதில் பெரும் பங்கு திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு உண்டு.

இன்றைய சென்னையை வலம் வந்து பாருங்கள். நீங்கள் பார்க்கின்ற எல்லா வளர்ச்சிப் பணிகளுமே தி.மு.க. உருவாக்கியதுதான்!

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்